10–45 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முண்டந்துறை வனப் பகுதியில் காணிக் குடியிருப்பில் காணிக்கார குடும்பங்கள் சுமார் 350 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். புனர் வாழ்வுத் திட்டத்தின் அடிப்படையில் ஆகஸ்தியர் காணிக் குடியிருப்புக்கு கிழக்கில், காரையார் மெயின்ரோடுக்குத் தெற்கில், தாமிரபரணி நதிக்கரையோரப் பகுதியில் குடும்பத்திற்கு 5 ஏக்கர் நிலம் வழங்கி, அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் பாதுகாப்பாக அவர்கள் வாழ்க்கை நடத்த அரசு நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, டைகர் புராஜக்ட் என்ற புலிகள் காப்பகம் என்ற பகுதியின் பிரச்சினையாகும் இது. என்றைக்கு நாம் புலிகளை பாதுகாக்க முயற்சிக்கிறோமோ அன்றிலிருந்து புலிகள் அதிகமாகப் பெருகும். அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு சற்று ஆபத்து எப்போதும் இருக்கிறது. அப்படி ஆபத்து இல்லாத இடத்திற்குக் குடிபெயர்ந்து செல்கிற அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்து, போதிய விவசாய நிலங்களையும் கொடுப்பதற்கு மத்திய அரசின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வில்லிவாக்கம் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுறாதது குறித்து.

திரு உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை வில்லிவாக்கம் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவு பெறாத நிலையில் உள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை மாநகராட்சியை சார்ந்த வில்லிவாக்கத்திற்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இருப்புப்பாதையும், செங்குன்றம் ஏரியிலிருந்து கீழ்ப்பாகத்திற்கு குடிநீர் செல்லும்

மூடு கால்வாயும், நகரின் ஊடே செல்வதால், வாரியம் இத் திட்டத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து அப்பகுதிகளை மேலும் சில உட்பகுதிகளாகப் பிரித்து பணிகளைச் செயல்படுத்தி வருகிறது.

தற்சமயம், வில்லிவாக்கத்தில் இருப்புப்பாதைக்கு வடக்கே ஒட்டி அமைந்துள்ள இராஜமங்கலம் சாலை, அதனை ஒட்டி அமைந்த ராஜாஜி நகரில் குழாய் அமைக்கும் பணிகள் நடை பெற்று வருகின்றன. மற்ற எல்லாப் பகுதிகளிலும் குழாய் அமைக்கும் பணிகள் முடிவடைந்துவிட்டன. 35 தெருக்கள் கொண்ட (இராஜமங்கலம் வீதி உட்பட) இராஜாஜி நகர் பகுதியில் மொத்தம் 6,767 மீட்டருக்கு குழாய்கள் அமைக்கப் பட வேண்டும். இதுவரை 25 வீதிகளில் 5,160 மீட்டருக்கு குழாய்கள் அமைக்கும் பணி முடிந்துவிட்டது எனவும், மீதமுள்ள தெருக்களில் குழாய் அமைக்கும் பணி ஜூலை 1990-ல் முடி வடையும் எனவும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.

மேற்கூறிய திட்டத்தில் ஒருபகுதியாக ரெட்ஹில்ஸ் சாலை யில் 860 மீட்டருக்கு குழாய் அமைக்கவேண்டும். இப்பணி 22—1—1990 அன்று தொடங்கப்பட்டது. இப்பணி நடைபெற ஏதுவாக ரெட்ஹில்ஸ் சாலை (இருப்புப் பாதையின் வடக்கே யிருந்து சீனிவாசநகர் வரை) சம்பந்தப்பட்ட துறையின் அனுமதியுடனும், செய்தித் தாள்களில் அறிவிப்புக் கொடுத்த பின்பும் 22—1—1990 முதல் ஊர்தி போக்குவரத்து தடை செய்யப் பட்டது. அன்றிலிருந்து, பல்லவன் போக்குவரத்து பேருந்துகள் இப்பாதையைத் தவிர்த்து மாற்றிவிடப்பட்டுள்ளன. இச்சாலை யில் 860 மீட்டருக்கும், குழாய் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. இதைச் சார்ந்த சில உப பணிகள் 21—4—1990-ல் முடிவடையும் என வாரியம் தெரிவித்துள்ளது. குழாய் அமைக் கும் பணிகளுக்காக வெட்டப்படும் குழிகளை சீரமைத்து சாலைகளை மற்றும் தெருக்களை செப்பனிடும் பணி சென்னை மாநகராட்சியால் செய்ய வேண்டியுள்ளதால் அச்செலவினத் திற்கான தொகை ரூ. 9.13 இலட்சத்தை வாரியம் மாநக ராட்சிக்கு செலுத்தியுள்ளது. இச்சாலையில் உப பணிகள் முடிவடைந்த உடன் சாலையைச் செப்பனிடும் பணி சென்னை மாநகராட்சியினால் எடுத்துக் கொள்ளப்படும் எனவும், சாலை ஊர்தி போக்குவரத்திற்கு திறந்து விடப்படும் எனவும் வாரியம் தெரிவித்துள்ளது.

பாதாளச் சாக்கடை இடும் பணி முடிவடைந்த சாலைகளில், மேற்கூறிய பணிக்காக தோண்டப்பட்ட சாலை பகுதிகளை பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து வசதி கருதி சாலை களை செப்பனிடும் நடவடிக்கை சென்னை மாநகராட்சியால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு, பாபா நகர், தெற்கு

ஜகந்நாத நகர், ராஜமங்கலம் மற்றும் பிற பகுதிகளில் சாலைகள் சீரமைக்கப்பட்டன. இதர சாலைப் பகுதிகளை செப்பனிடும் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், பாதாளச் சாக்கடைக்காக தோண்டப்பட்ட சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை மற்றும் அனைத்துச் சாலைகளும் விரைவில் பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் பயன்படும் வகையில் செப்பனிடப்படும் எனவும் சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருடைய 32, 33 ஆவது வட்டங்களையும், கொளத்தூர், வில்லிவாக்கம் பகுதிகளையும் அடக்கிய திட்டம் இது. இந்த புதிய பாதாளச் சாக்கடைத் திட்டத்தில், சில குறுக்குத் தெருக்கள் வடக்கு ஜகந்நாத நகர், வடக்கு ஜகந்நாதநகர் இணைப்பு போன்ற பகுதிகள் இணைக்கப்படவில்லை. பிரதான வீதிகளுக்கு பாதாளச் சாக்கடை அமைத்து, அவற்றையொட்டிய குறுக்குத் தெருக்களுக்கு அமைக்கவில்லை என்று சொன்னால் இத்திட்டம் சரியாக செயல்படாத நிலை ஏற்படும். ஆகவே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் இந்தப் பகுதிகளும், குறுக்குத் தெருக்களும் சேர்க்கப்படவேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்க ஆவன செய்யப்படுமா? இது குறித்து ஆய்வை அமைச்சர் மட்டத்திலேயே மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திட்டமிட்டிருக்கிறபடி பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத்தில் கலந்து ஆலோசனை செய்தபோது, நேரிலேயே குறிப்பிட்டதன் அடிப்படையில் பணிகள் வகுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக சில பணிகளையும் அதில் இணைக்கவேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வில்லிவாக்கம் ரயில் நிலையத்திற்கு வடக்கிலும் ஏராளமான புதிய குடியிருப்புப் பகுதிகள் உருவாகியிருக்கின்றன. வில்லிவாக்கம் பஸ் நிலையம், வில்லிவாக்கம் ரயில் நிலையம், சென்னை—திருவள்ளூர் நெடுஞ்சாலை ஆகியவற்றை இணைக்கிற பிரதான சாலை ரெட்ஹில்ஸ் சாலைதான். இச்சாலை பேருந்து போக்குவரத்துக்கு மட்டுமல்ல, நடந்து செல்வதற்கும் சிரமமான நிலையில் உள்ளது. சமீபத்திய மழையில் இன்னும் மோசமாகி உள்ளது. இந்த வேலைகளை

TRUTH ALONE TRIUMPHS

யெல்லாம் விவர அறிக்கையில் 21–4–90ல் முடியும் என்று வாரியம் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பணிகள் முடிந்ததாகத் தெரியவில்லை. சாலை செப்பனிடும் பணியும் தொடங்கப்படவில்லை. இதனால் பொது மக்களும் அப்பகுதி வியாபாரிகளும் மிகுந்த தொல்லைக்கு உள்ளாகி யிருக்கிறார்கள். எனவே அந்த வேலையை விரைவாக முடிக்க அமைச்சர் அவர்கள் நேரடியாக பார்வையிட்டு, நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் இந்த மழையில் ரெட்டேரி மற்றும் கொரட்டூர் ஏரியிலிருந்து நிரம்பி வழியும் வெள்ளம், பாபா நகர் போன்ற பகுதிகளை இடுப் பளவுக்கு மூழ்கடித்துள்ளது. இந்த வெள்ளம் வடிவதற்கு எந்த ஏற்பாடும் இல்லை. மழை முடிந்து பல மாதங்கள் ஆனாலும் அந்த நிலை இருப்பதால் இது சரி செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் 21–4–1990-ல் முடிவடையும் என்று சொல்லியிருப்பது அங்கே குழாய்கள் அமைப்பதற்கான பணிகளும் அதைச் சார்ந்திருக்கிற மற்ற பணிகளும் தான். இப்போது இந்தப் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற சாலைகளைச் செப்பனிடுகிற பணிகள் எல்லாம் இதில் அடங்காது. அந்தப் பணிகளைச் செய்ய வேண் டிய பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இல்லை என்பதை உறுப்பினரே அறிவார். வெள்ள நீர் என்று சொல்லும் போது, அது குடிநீர் வடிகால் வாரியத்திடம் வருவதில்லை. சாக்கடை நீர் சுத்தப்படுத்துகிற பணிகள் மட்டுமே அந்த வாரியத்திடம் இருக்கிறது. இந்தப் பணிகளால் ஏற்பட்டிருக் கின்ற சாலைகளின் பிளவுகளை எல்லாம் செப்பனிட உடனடி யாக நிவாரணம் அளிக்கப்பட்டு அந்தப் பணிகள் முடிவடைய இருக்கின்றன என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

பொதுவாழ்வினர் நேர்மைப் பாதுகாப்பு மன்றச் சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவாழ்வினர் நேர்மைப் பாதுகாப்பு மன்றச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, **நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.**